**"உமது நிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம். அடிக்கப்படும் ஆடுகளைப்போல எண்ணப்படுகிறோம்."** **- சங் 44 : 22**

நமக்கு ஒரே பலி இருக்கிறதென்பதையும், அது கர்த்தருக்கும் அவருடைய காரியங்களுக்கும் ஊழியம் செய்ய நமக்கு வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தின் முன்னேற்றத்திலும் ஒவ்வொரு நாளும் அவருக்கு செலுத்தப்படவேண்டும் என்றும் ஞாபகத்தில் வைத்துக்கொள்வோமாக. அது அநேக சிறு தியாகங்களைக் கொண்டதாக இருக்கும்போது, அவைகளில் சில சொல்லுவதற்கோ அல்லது சிந்திப்பதற்கோ மிகவும் சிறியவைகளாக இருந்தாலும், கர்த்தருடைய குடும்பத்தில் சேர்க்கப்பட்டதின் துவக்கத்தில் நாம் செய்த அந்த ஒரே பலியை பூர்த்தி செய்வதற்கு இவைகளெல்லாம் வேண்டியதாயிருக்கின்றன என்பதையும் நாம் ஞாபகத்தில் வைக்க வேண்டும். நமது சித்தங்களை கொடுத்தபோது நமக்குண்டான எல்லாவற்றையும் கொடுத்தோம். ஜீவியத்தின் சிறுகாரியங்களின் எதிலும் தாமதம் செய்வது அதாவது, அது கர்த்தரைப் பிரியப்படுத்தும் என்று, நாம் நினைக்கிற எதையாவது தியாகம் செய்ய மறுப்பது, நாம் அவருக்கு அர்ப்பணம் செய்திருப்பதில் அவ்வளவு பாகத்தை நிறுத்தி வைப்பதாகும்.

**-Z ’03, 408 (R 3265)**

கர்த்தரின் ஆள், குணம், வார்த்தை, விவகாரம், இவைகளில் உண்மைப் பற்றுள்ளவர்களாயிருக்கிறதின் காரணமாக, கிறிஸ்துவை உண்மையாய் பின்பற்றுகிறவர்கள் சுவிசேஷயுகம் முழுவதிலும் உபத்திரவப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஜீவன் ஒரு ஆட்டின் ஜீவனைப் போல சொற்ப மதிப்புள்ளதாக எண்ணப் பட்டிருக்கிறது. அவர்கள் அவ்வளவு இரக்கமற்றவிதமாக கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனபோதிலும், தேவ ஆட்டுக்குட்டியாகக் கொல்லப்பட்டவருடைய பலியின் மரணத்தில் யேகோவா தேவன் பிரியமாயிருந்தது போல, கர்த்தரும் தன்னிமித்தமாக உண்மையுள்ளவர்கள் சகிக்கும் பலியின் மரணத்தில் பிரியமுள்ளவராயிருக்கிறார். ஏனெனில், "கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது." - சங் 116 : 15. **- P '33, 79.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

ரோம 8:35,36; மத் 5:10-12,44; 10:16-18,21,22,26,28; 20:22,23,34,35; லூக் 21:12-19; யோவா 15:18,19; 16:1,2; 1கொரி 4:9-13; 15:30-32; 2கொரி 4:8-12; யோவா 12:23-26; 2தெச 1:4; 2தீமோ 2:9-12; எபி 10:32-34; 13:12,13; 1பேது 3:14-17.

**கோபுர வாசிப்பு : Z ’13, 37 (R 5172).**

**வினாக்கள் :** இந்த வாரத்தில் நான் துன்பத்தைச் சகித்தேனா? எப்படி? ஏன்? அதன் பலன் என்ன ?